08.10.2025.

O.S.N0.284/2021

DW.2. திரு.ஹாமீம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் SSLC பாஸ் செய்துள்ளேன். நான் உரக்கடை நடத்திவருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய தந்தை எதுவரை படித்துள்ளார் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்று நினைக்கிறேன். எனது அப்பா ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவார் என்றால் அவர் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டு நான் பார்த்தது இல்லை. எனது தகப்பனார் ஆங்கிலத்தில் கையெழுத்து போடமாட்டார் என்று என்னால் உறுதியாக மறுத்து சொல்லமுடியாது என்று சொன்னால் சரிதான். எனது அப்பா என்ன தொழில் செய்துவந்தார் என்றால் விவசாயம் செய்து வந்தார். நான் தற்போது செய்துவரும் உரக்கடை தொழிலை முன்பு எனது தகப்பனார் தான் செய்துவந்தார் என்றால் நான் SSLC முடித்தவுடன் எனக்கு தொழில் இல்லை என்பதால் எனக்கு உரக்கடை வைத்து கொடுத்தார். நான் எந்த வருடம் SSLC முடித்தேன் என்றால் 1972ல் முடித்தேன். உரக்கடை எனக்கு வைத்துக்கொடுக்கப்படவில்லை என்றும் அது என் அப்பாவால் நடத்துப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இறக்கும்போது எத்தனை வயது என்றால் 84 வயது இருக்கும். எனது தாயார் படிக்கவில்லை. அவர் பால் வியாபாரம் செய்து வந்தார். அந்த பால் வியாபாரம் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது தான் என்றும் அதை தான் எனது தாயார் செய்துவந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது பிள்ளைகளில் யார் யாருக்கு வீடு

கொடுக்கவேண்டும், யார், யாருக்கு வயல் கொடுக்கவேண்டும் என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. 23.12.2005 செட்டில்மெண்ட் பத்திரத்தில் யார், யாருக்கு எந்த வீடு, யார், யாருக்கு எந்த வயல் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. எனது தகப்பனாருக்கு உண்மையிலேயோ அப்படி விருப்பம் இருந்தால் அதை அந்த செட்டில்மெண்டில் சொல்லியிருப்பார் என்றால் அந்த செட்டில்மெண்ட் எழுதியவிவரம் எனக்கு தெரியாது. சுயநினைவு இல்லாத எனது தகப்பனாரிடம் இருந்து ஆண்பிள்ளைகள் செட்டில்மெண்ட் எழுதி வாங்கினோம் என்றும் எனது தகப்பனார் இஷ்டப்பட்டு செட்டில்மெண்ட் எழுதித்தரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவர் இஷ்டப்பட்டு செட்டில்மெண்ட் எழுதியிருந்தால் பெண் மக்களுக்கும் சொத்து கொடுத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

I Additional District Judge,
Tirunelveli.